# விழுப்புரம் நகராட்சி

**2022–ஆம் ஆண்டு அக்டோபர்** மாதம் **14–ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00** மணிக்கு நடைபெற்ற **நகர்மன்ற "அவசர கூட்ட"** நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **திருமதி.பி.தமிழ்ச்செல்வி,** எம்.பி.ஏ.,
**நகர்மன்ற தலைவர்,**
**விழுப்புரம் நகராட்சி**

## மன்றப்பொருள்

**1.** இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோரது ஜூன்–2022, ஜூலை–2022, ஆகஸ்ட் – 2022 மற்றும் செப்டம்பர் 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

பதிவு செய்யலாம்.

**2.** விழுப்புரம் நகராட்சியின் பொது சுகாதார பிரியில் இயங்கி வரும் மினி காம்பாக்டர் TN 32 AL 2892 வாகனத்திற்கு தகுதி சான்று முடிவடைந்து விட்டதால், தகுதி சான்று (FC) எடுக்க ஏதுவாக, பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில், அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான TVS Mobility Pvt Ltd விழுப்புரம் அவர்கள் ரூ.217200/– க்கு விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். எனவே மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்ய மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் தகுதி சான்று (FC) எடுப்பதற்கும், உத்தேச செலவினமாக ரூ.225000/– இலட்சத்திற்கும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். (295/2022)

**3.** விழுப்புரம் நகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட 5 ஊராட்சி பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக ரூ.263.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழக அரசாணை நிலை எண்.01, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி–3(2) நாள்.03.01.2020–ன்படி நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி நிர்வாக அனுமதியினை தொடர்ந்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகம் (HUDCO), குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) கடித எண். WSPF/Villupuram UGSS/Loan/2020/20 Dt.21.07.2022–ல் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.262.87 கோடி நிதியில் ரூ.65.75 கோடி IUDM திட்ட நிதியில் மான்யமாகவும், ரூ.163.58 கோடி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகத்திலிருந்து (HUDCO) குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் (WSPF) கீழ் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை மையத்தின் (TNUIFSL) வழியாக கடனாகவும், எஞ்சிய தொகை ரூ.33.54 கோடி விழுப்புரம் நகராட்சி பங்களிப்பு ஒதுக்கீடு செய்தும் இத்திட்டத்தினை செயல்படுத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பிறகு மொத்த திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.262.87 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட அதற்கான நிதி ஆதாரத்திற்கு அரசாணை நிலை எண்.123 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி.3(2) நாள்.09.12.2021–ல் கடன் தொகையினை பெறுவதற்கான நிபந்தனைகள் விதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையில் உறுப்பினர் மற்றும் செயலாளர் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் அவர்களின் கடிதத்தின்படி WSPF / VILLUPURAM / UGSS LOAN / 2020 / 07, நாள்.16.04.2021 கடன் தொகை ரூ.163.58 கோடி என இறுதி செய்து HUDCO நிறுவனத்திடம் இருந்து பெற ஆணையிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) தனது கடித எண்.WSPF / VILLUPURAM / UGSS LOAN / 2020 / 13, நாள்.11.04.2022 கடிதத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகத்தின் (HUDCO) மூலம் கடன் உதவிப் பெறும் வகையில் விழுப்புரம் நகராட்சிக்கான திட்ட மதிப்பீடு தொகையான ரூ.262.87 கோடியில் (HUDCO கடன் தொகை ரூ.163.58 கோடி + IUDM ரூ.65.75 கோடி மீதம் ரூ.33.54 கோடி நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள) அனுமதித்து அதற்கான நிபந்தனைகள் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் (Terms and Conditions) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்படி கடன் தொகையை விழுப்புரம் நகராட்சி குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திடம் (WSPF) இருந்து பாதாள சாக்கடை திட்ட செயலாக்கத்திற்கு கடன் உதவி பெற மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம் மற்றும் ஒப்புதல் அளிக்கலாம்.
2. பாதாள சாக்கடை திட்டம் செயலாக்கத்திற்கு குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதி திட்டம் (WSPF) இருந்து விழுப்புரம் நகராட்சிக்கு ரூ.163.58 கடன் உதவி பெறுவதற்கும் மற்றும் IUDM திட்ட நிதியிலிருந்து ரூ.65.75 கோடி மானியமாக பெறுவதால் நகராட்சி நிதியிலிருந்து பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் நிதியிலிருந்து ரூ.33.54 கோடி கொடுப்பதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(7907/2017/இ3)

**4.** விழுப்புரம் நகராட்சியில் காகுப்பத்தில் 9.00 MLD சுத்திகரிப்பு நிலையத்திற்கு மதிப்பீடு ரூ.35.00 இலட்சத்தில் ஆன்லைன் கண்காணிப்பு அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.01.2022 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் M/s RL Technologies Pvt Ltd ஒப்பந்ததாரர் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 10.03.2022 அன்று விலைப்புள்ளி உறைகள் பிரிக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் மதிப்பீட்டை விட | விலை குறைப்பு |
|---|---|---|---|---|
| 1 | M/s RL Technologies Pvt Ltd | 35,00,000 | ரூ.36,58,000/- 6.90 % அதிகம் | 4.00% மதிப்பீட்டை விட கூடுதல் ரூ.35,58,880/- |

மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s RL Technologies Pvt **Ltd** ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கோரி (Negotitation) அறிவிப்பு வழங்கப்பட்டதையடுத்து, மதிபீட்டை விட கூடுதலாக 6.90%-லிருந்து மதிபீட்டை விட கூடுதலாக 4.00% என (GST உள்பட விலைப்புள்ளி ரூ.35,58,880/-) குறைப்பு செய்து கொடுத்துள்ளார். திட்ட பணியின் அவசர அவசியம் கருதி 4.00% மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்ட பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (10119/2021/இ3)

**5.** விழுப்புரம் நகராட்சியில் எருமணந்தாங்கலில் **3.50** MLD சுத்திகரிப்பு நிலையத்திற்கு மதிப்பீடு ரூ.35.00 இலட்சத்தில் ஆன்லைன் கண்காணிப்பு அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.01.2022 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் M/s RL Technologies Pvt Ltd ஒப்பந்ததாரர் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 10.03.2022 அன்று விலைப்புள்ளி உறைகள் பிரிக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் மதிப்பீட்டை விட | விலை குறைப்பு |
|---|---|---|---|---|
| 1 | M/s RL Technologies Pvt Ltd | 35,00,000 | ரூ.36,58,000/- 6.90 % அதிகம் | 4.00% மதிப்பீட்டை விட கூடுதல் ரூ.35,58,880/- |

மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s RL Technologies Pvt Ltd ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கோரி (Negotitation) அறிவிப்பு வழங்கப்பட்டதையடுத்து, மதிபீட்டை விட கூடுதலாக 6.90%-லிருந்து மதிபீட்டை விட கூடுதலாக 4.00% என (GST உள்பட விலைப்புள்ளி ரூ.35,58,880/-) குறைப்பு செய்து கொடுத்துள்ளார். திட்ட பணியின் அவசர அவசியம் கருதி 4.00% மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்ட பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(10119/2021/இ3)

**6.** விழுப்புரம் நகராட்சியில் 15-வது மத்திய நிதிக்குழு மான்யம் (Tied Grant) 2020-21-ன் கீழ் Purchasing of 125KVA Generator 2nos for Ellis Head works பணி செய்ய மதிப்பீடு ரூ.19.00 இலட்சத்திற்கு நகர மன்ற தீர்மான எண்.2802, நாள்.30.11.2021-ல் ஒப்புதல் பெறப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 24.05.2022-ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் மதிப்பீட்டை விட | விலை குறைப்பு |
|---|---|---|---|---|
| 1 | திரு.**S**.மாவோ, ஒப்பந்ததாரர். | 19,00,000 | 4.83 % அதிகம் | 4.50% மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | திரு.**R**.நாகராஜ், ஒப்பந்ததாரர். | | 6.09 % அதிகம் | - |

மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.S.மாவோ, ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கோரி (Negotitation) அறிவிப்பு வழங்கப்பட்டதையடுத்து, மதிப்பீட்டை விட கூடுதலாக 4.50% என (GST உள்பட) விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளார். எனவே, 4.50% மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் முன்அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கி, செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்காணும் செலவினத்தை 15-வது மத்திய நிதிக்குழு மான்யத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(6474/2020/இ2)

**7.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கும் கீழ்கண்ட வாகனங்களுக்கு வாகன காப்பீட்டு காலம் ஜீன் 2022ல் முடிவடையும் நிலையில் உள்ளதால், அதனை புதுப்பிக்க விழுப்புரம் தி நியூ இந்தியா அஷ்யுரன்ஸ் கம்பெனி லிட்.,(THE NEW INDIA ASSURANCE COMPANY LTD) அவர்களிடம் இருந்து ரூ.2,49,741/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று நாற்பத்தொன்று மட்டும்) தொகை செலுத்த கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட விவரப்படி காப்பீட்டு தொகை செலுத்தவும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வண்டி எண் | பாலிசி எண்கள் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | TN 32 AQ 7913 | 7130023121010000 1433 | 19,344/- |
| 2 | TN 32 AQ 7852 | 71300231210100001432 | 19,344/- |
| 3 | TN 32 AQ 7980 | 71300231210100001437 | 19,344/- |
| 4 | TN 32 AQ 7970 | 71300231210100001435 | 19,344/- |
| 5 | TN 32 AQ 7996 | 71300231210100001438 | 19,344/- |
| 6 | TN 32 AQ 7923 | 71300231210100001434 | 19,344/- |
| 7 | TN 32 AQ 7975 | 71300231210100001436 | 19,344/- |
| 8 | TN 32 AC 8150 | 71300231210100001440 | 31,597/- |
| 9 | TN 32 D 2651 | 71300231210100001439 | 9,216/- |
| 10 | TN 32 AC 8163 | 71300231210100001441 | 31,597/- |
| 11 | TN 32 AC 8003 | 71300231210100001443 | 41,923/- |
| மொத்தம் | | | 2,49,741/- |

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். பொது சுகாதார நலன் கருதியும், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் வாகனங்களுக்கு காப்பீடு செய்திட நியூ இந்தியா அஷ்யுரன்ஸ் கம்பெனி லிட்.,(THE NEW INDIA ASSURANCE COMPANY LTD) என்ற நிறுவனத்திற்கு, தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(741/2014/எச்2)

**8.** விழுப்புரம் நகர பொதுமக்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரை தினசரி சோதனை செய்வதற்கு Water Test Kit 10 எண்ணிக்கை வாங்குவதற்கு தோராய செலவினமாக தொகை ரூ.20,000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (4698/2022/இ2)

**9.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வடகிழக்கு பருவமழை காரணமாக தாழ்வான வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை JCB இயந்திரம் மூலம் அகற்றிடும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1,67,000/- தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s Shri Hari Agencies, நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.1,64,238/-ஐ வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

மன்றம் பதிவு செய்யலாம். (6586/2021/இ2)

**10.** விழுப்புரம் நகராட்சியில் 2022 குடியரசு தின விழாவை முன்னிட்டு நகராட்சி அலுவலகம், காந்தி சிலை பேருந்து நிலையம் அருகில் உள்ள காந்தி சிலை மற்றும் நகராட்சி பூங்காவில் உள்ள காந்தி சிலை வண்ண விளக்குகள், அலங்கார தோரணம், அலுவலகத்தில் சாமியனா பந்தல், காந்தி சிலைகளுக்கு மலர் மாலைகள் மற்றும் இதர ஏற்பாடுகள் செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.61,000/− தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15−ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.K.இராஜா, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.60,800/−ஐ வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :−**</u>

மன்றம் பதிவு செய்யலாம். (351−1/2022/இ2)

**11.** விழுப்புரம் நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, கன்னிகா பரமேஸ்வரி முதல் முருகா திரையரங்கு வரையிலும், பழைய பேருந்து நிலையம் முதல் PJN ரோடு இரயில்வே சந்திப்பு வரையிலும் 20 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் 16 எண்ணிக்கையிலான ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு பிரச்சாரம் செய்வதற்கு, விலைப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15−ன் கீழ் பணி செய்து முடித்தமைக்கு Amman Sound Service−க்கு ரூ.1,16,800/−ஐ தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :−**</u>

மன்றம் பதிவு செய்யலாம். (5429/2021/இ1)

**12.** நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022−ல் நடைபெற உள்ளதால் விழுப்புரம் நகராட்சியின் நகர் மன்ற கூட்ட அரங்கில் நகர் மன்ற கூட்ட தொடர் நடக்கும் சமயங்களில் மன்ற தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் விவாதம் நடத்த ஏதுவாக, ஒலி பெருக்கி மற்றும் மைக்செட்டுகள் பழுதடைந்துள்ளதை சர்வீஸ் செய்திடவும், 1).Micro Cable Full Coil புதியதாக மாற்றிடவும் (8 எண்ணிக்கை) 2).Ahiya SSA 250 Amplifier Service − 1 எண்ணிக்கை 3). 3 Crore Power Card புதியதாக மாற்றிடவும் (3 எண்ணிக்கை) 4).Mixer Full Service − 3 எண்ணிக்கை மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்வதற்கு பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15−ன் கீழ் விலைப்புள்ளி கோரி திரு.K.இராஜா ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, பணி செய்து முடித்தமைக்காக ரூ.1,72,545/−ஐ தொகையை ஒப்பந்ததாரருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :−**</u>

மன்றம் பதிவு செய்யலாம். (313/2022/இ1)

**13.** விழுப்புரம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021–22–ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.27519–41/2021/P2, நாள்.31.05.2022 தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, KK ரோட்டில் அமைந்துள்ள எரிவாயு தகனம் இடத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.60 இலட்சத்தில் மறுஒப்பந்தப்புள்ளி 01.07.2022 தேதியில் கோரியதை தொடர்ந்து, கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.பிரமிளா, ஒப்பந்ததாரர். | ரூ.2,53,107/– | –0.15 % குறைவு |
| 2 | N.சுந்தர்ராஜன் & கோ., ஒப்பந்ததாரர். | ரூ.2,56,097/– | 1.03 % அதிகம் |

எனவே, திருமதி.பிரமிளா, என்பவர் மதிப்பீட்டை விட –0.15 % குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை ஏற்று அரசு பணி என்பதால் அவசியத்தை கருதி வேலை உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

பதிவு செய்திடலாம். (6191/2021/இ1)

**14.** விழுப்புரம் நகராட்சியில் ஆணையாளரின் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN 32 AB 3276 பழுது ஏற்பட்டும், AC இயங்காமலும், ஆயில் சர்வீஸ் மற்றும் பெயிண்டிங் ஒர்க் செய்ய வேண்டியுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் சங்கலாயா (Schangalaya Motors) மோட்டார் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி செய்து முடித்தமைக்கு ரூ.1,59,572/– தொகை வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் பதிவு செய்யலாம். (4158/2021/இ1)

**15.** 2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்ய வரும் வேட்பாளர்களை சம்மந்தப்பட்ட ARO பிரிவுக்கு அனுப்புவதற்கு ஒலி பெருக்கி பொருத்தி காவலர் மூலம் அறிவிப்பு செய்வதற்கு 5 எண்ணிக்கை மைக் செட் வாடகையில் அமைப்பதற்கு பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, பணி செய்து முடித்தமைக்கு Amman Sound Service–க்கு ரூ.20,640/–ஐ தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் பதிவு செய்யலாம். (313/2022/இ1)

**16.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொலி காட்சியில் தமிழக அரசு அனைத்து தொடக்க பள்ளிகளில் காலை சிற்றூண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டதையடுத்து, விழுப்புரம் நகராட்சி பகுதிகளில் உள்ள ஆரம்ப பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றூண்டி வழங்கிட அதற்கான சமுதாய சமயற்கூடம் கட்டிடங்களை கட்டிட கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள கீழ்கண்ட இடங்கள் தேர்வு செய்த விவரம் வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காமராஜர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதியதாக சமுதாய சமயற்கூடம் கட்டும் பணி. | 23.60 |
| 2 | நரசிங்கபுரம் OHT அருகில் புதியதாக சமுதாய சமயற்கூடம் கட்டும் பணி. | 23.60 |

எனவே, இரண்டு இடங்களிலும் சமுதாய சமயற்கூடம் அமைத்திட மேற்கண்ட மதிப்பீட்டில் கட்டிடவும், அதற்கான செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரிடலாம்

(4641/2022/சி3)

**17.** விழுப்புரம் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு மின்சார வசதியான மும்முனை மின் இணைப்பு, 100 KVA அளவு மின் வசதி, பேனல் போர்டு வைக்க EB Power Room கட்டுதல், Genset வைக்க ஏதுவாக Concrete Bed அமைத்தல் மற்றும் நகராட்சி அலுவலக கட்டிடத்தின் அனைத்து அறைகளுக்கும் Internet வசதி ஏற்படுத்திட Network lane cable பதித்திட வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ரூ.9.70 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம். (245/2022/இ1)

**18.** விழுப்புரம் நகராட்சியில் நூற்றாண்டு விழா சிறப்பு நிதியின் கீழ் புதியதாக நகராட்சி அலுவலகம் கட்டப்பட்டது. மேற்படி கட்டிடத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.04.2022 அன்று திறந்து வைப்பதற்கான விழா ஏற்பாடுகள் மற்றும் இதர பணிகளை செய்வதற்கு பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15-ன் கீழ் விலைப்புள்ளி கோரி M/s PMS Engineering Construction & Co., Salem ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, பணி செய்து முடித்தமைக்காக ரூ.4,94,994/-ஐ தொகையை ஒப்பந்ததாரருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம். (5144/2019/இ1)

**19.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.18856/2022/தூஇதி2, நாள்.13.07.2022 கடிதத்தில் தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் கீழ் மூன்றாவது மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில் 27.06.2022 நாளிட்ட நடவடிக்கைகளின்படி விழுப்புரம் நகராட்சிக்கு 2022–23–ம் நிதியாண்டிற்கு ஒரு எண்ணிக்கையிலான சிறுநீர் கழிப்பறை உள்ளிட்ட பொதுக்கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.31.28 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசின் மான்யம் ரூ.10.32, மாநில அரசின் மான்யம் ரூ.6.88 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஜி.ஆர்.பி தெருவில் சிறுநீர் கழிப்பறை உள்ளிட்ட பொதுக்கழிப்பறை கட்டிடம் கட்டிட ரூ.31.28 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, ஜி.ஆர்.பி தெருவில் பொதுக்கழிப்பறை கட்டிடம் கட்டிட ரூ.31.28 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் கூடுதல் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (6981/2021/இ1)

**20.** துப்புரவு ஆய்வரின் குறிப்பில் இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் JCB வாகன எண்.TN32 2651 வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவடைவதால், தகுதிசான்று பெறவும் அதனை பழுது நீக்கம் செய்யவும் உத்தேச செலவினம் ரூ.275000/–க்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டைனாடெக், விழுப்புரம் மூலம் பணி மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம். (948 /2021)

**21.** விழுப்புரம் நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தின் உட்புறம் வடக்கு பக்கம் பழுதடைந்த சுற்றுச்சுவருக்கு பூச்சு வேலை செய்தல் மற்றும் ஆண்கள் சிறுநீர் கழிவறை சுவர் உடைந்ததை புதியதாக கட்டுவதற்கு பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி திரு.S.கோவிந்தராஜ் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, பணி செய்து முடித்தமைக்காக ரூ.1,14,889/–ஐ தொகையை ஒப்பந்ததாரருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் பதிவு செய்யலாம். (245/2022/இ1)

**22.** விழுப்புரம் நகராட்சியில் 2021 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு நகராட்சி அலுவலகத்தின் முன் பகுதி சுற்றுச்சுவர் முழுவதும் வர்ணம் பூசுதல், Serial Light, Speaker set, Amplifier, Samiyana Panthal போன்றவற்றை அமைத்திட வேண்டியுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணி செய்து முடித்தமைக்கு ஒப்பந்ததாரர் திரு.K.இராஜா என்பவருக்கு ரூ.2,38,426/– தொகை வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் பதிவு செய்யலாம். (4281/2021/இ1)

**23.** இந்நகராட்சியில் 06.12.2018–ல் வரப்பெற்ற திரு.ஆர்.ரமேஷ் ஒப்பந்ததாரின் மனுவில் 04.05.2017 அன்று நடைபெற்ற அரசு ஒப்பந்தத்தில் (Construction of Compound wall, Godown, Office rest room, Water supply) பணி முடித்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்து தொடர்ந்து, தான் செலுத்திய முன்வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை (EMD FSD) ரூ.74000/– 73950/– திரும்ப பெற விண்ணப்பம் அளித்துள்ளார்.

சம்மந்தப்பட்ட பிரிவு எழுத்தர்கள் மற்றும் பிரிவு அலுவலர்கள் அன்னாருக்கு தொகையை வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்கள்.

இந்நகராட்சி 2017–18 ஆம் அண்டு காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் திரு.ஆர்.ரமேஷ் பெயரில் வைப்பு தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்த தொகை விபரம் கீழ் கண்டவாறு உள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | காலங்கடந்த ஆண்டு | பதிவேடுகள் | தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை Construction of Compound wall, Go down, Office rest room, Water supply) | 2017–18 (I) | 224 | 74000/– |
| 2 | திடக்கழிவு மேலாண்மை Construction of Compound wall, Go down, Office rest room, Water supply) | 2017–18 (II) | 366 | 73950/– |

எனவே மேற்காணும் காலங்கடந்த வைப்பு தொகையினை சம்மந்தப்பட்ட திரு.ஆர்.ரமேஷ் ஒப்பந்ததாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்காலம். (8787/2018/பி4)

**24.** விழுப்புரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தின் காகுப்பம் மற்றும் எருமணந்தாங்கலில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் கழிவுநீர் கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு தினசரி சுத்திகரிக்கப்பட்ட நீர் ஓடையில் வெளியேற்றப்படுகிறது. இவ்வாறு வெளியேறும் நீரின் தரத்தினை அரிய தமிழ்நாடு மாசுகட்டுபாடு வாரியத்தால் மேற்கண்ட காகுப்பம் சுத்திகரிப்பு நிலையம் Zone–I (STP–I) நீர் எடுக்கப்பட்டு சோதனை செய்ததற்கான கட்டணம் 30.09.2021 முதல் 01.02.2022 வரை

ரூ.14,200/– மற்றும் எருமணந்தாங்கல் சுத்திகரிப்பு நிலையம் Zone–II (STP–II) 30.09.2021 முதல் 02.02.2022 வரை ரூ.13,716/– ஆக மொத்தம் ரூ.27,916/–ஐ சொலுத்தக் கோரி வரப்பெற்றுள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம், விழுப்புரம் அவர்களது கடிதம் எண். F0083/DEE/TNPCB/ROA/VPM/2022, நாள்.25.04.2022 மற்றும் Lr.No.84/ROA/DEE/TNPCB/VPM/2022, நாள்.25.04.2022–ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

1. பணியின் அவசர அவசியம் கருதி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் காகுப்பம் மற்றும் எருமணந்தாங்கலில் அமைய பெற்றுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேறும் நீரின் தரத்தினை சோதனை செய்ததற்கான கட்டணம் ரூ.27,916/–ஐ செலுத்த மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்காணும் தொகையினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (6797/2006/இ3)

**25.** விழுப்புரம் நகராட்சியில் வடகிழக்கு பருவ மழை பெய்து வருவதால் தாழ்வான பகுதிகளில் உள்ள மழைநீரை வெளியேற்றுதவற்கு Diesel Pump மின்மோட்டார்கள், 5HP Submersible மின்மோட்டார்கள், பேனல் போர்டுகள், PVC பைப் மற்றும் இதர மின்சாதன பொருட்கள் வாங்குவதற்கு பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணி செய்து முடித்தமைக்கு திரு.R.நாகராஜ் ஒப்பந்ததாரருக்கு ரூ.3,83,804/– தொகை வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

மன்றம் பதிவு செய்யலாம். (6586/2021/இ1)

**26.** இந்நகராட்சியில் 2022–23 ஆம் ஆண்டில் ஓய்வு பெறும் மற்றும் இறந்த பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை அதற்கான வட்டித் தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை ஆகியவற்றை வழங்கிட உத்தேச செலவினம் ரூ.300000/– (மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை நகராட்சியில் வருவாய் நிதியில் இருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்

(257/2022/பி4)

**27.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட எருமணந்தாங்கல், அனிச்சம்பாளையம், காமராஜர் பள்ளி வளாகம், அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள நுண் உர செயலாக்க மையங்களில் இயங்கி வரும் மின்மோட்டார்கள், Coveyor Belt Motor பழுதடைந்துள்ளதை சரி செய்திடவும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பின்புற சாலையில் கனரக வாகனம் நுழைவதை தடுக்க Post அமைத்திடவும் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு பணியின் அவசர அவசியம் கருதி

பிரிவு 15-ன் கீழ் விலைப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணி செய்து முடித்தமைக்கு ஒப்பந்ததாரர் திரு.R.நாகராஜ் என்பவருக்கு ரூ.1,96,731/- தொகை வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(5416/2021/இ1)

**28**. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கும் TN 32 AL 2892 கீழ்கண்ட வாகனத்திற்கு வாகன காப்பீட்டு காலம் ஆகஸ்ட் 2022ல் முடிவடையும் நிலையில் உள்ளதால், அதனை புதுப்பிக்க விழுப்புரம் தி நியூ இந்தியா அஷ்யுரன்ஸ் கம்பெனி லிட்.,(THE NEW INDIA ASSURANCE COMPANY LTD) அவர்களிடம் இருந்து ரூ.43787/- (ரூபாய் நாற்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று எண்பத்து ஏழு மட்டும்) தொகை செலுத்த கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட விவரப்படி காப்பீட்டு தொகை செலுத்தவும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் அனுமதிக்கலாம். பொது சுகாதார நலன் கருதியும், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் வாகனத்திற்கு காப்பீடு செய்திட நியூ இந்தியா அஷ்யுரன்ஸ் கம்பெனி லிட்., (THE NEW INDIA ASSURANCE COMPANY LTD) என்ற நிறுவனத்திற்கு, தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(741/2014/எச்2)

**29.** விழுப்புரம் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அலுவலக வேலை காரணமாக வெளியூர் பயணங்கள் மேற்கொள்வதற்கும், பயிற்சி மற்றும் பணி மாறுதலில் வரப்பெற்ற பயணங்களுக்கும் பயணப்படி வழங்க அதன் பேரில் 2022-23-ம் ஆண்டிற்கு சம்மந்தபட்ட பணியாளர்களுக்கு பயணப்படி வழங்க உத்தேச செலவினம் ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் வருவாய் நிதியிலிருந்து செலவிட அனுமதிக்கலாம்.

(6656/2021/பி4)

**30.** விழுப்புரம் நகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட 5 ஊராட்சி பகுதிகளான 1.காகுப்பம், 2.சாலாமேடு, 3.எருமணந்தாங்கல் 4.வழுதரெட்டி மற்றும் 5.பானாம்பட்டு பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திட கழிவு நீர் தூக்கி நிலையம் மற்றும் பிரதான கழிவு நீரேற்று நிலையம் அமைப்பதற்கான மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து அவ்விடத்திற்கு சம்மந்தப்பட்ட சர்வே எண்ணின் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள இடங்களை பாதாள சாக்கடை திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ள அளவுகளின்படி ஒதுக்கப்படுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | தேர்வு செய்யப்பட்ட இடம் | மாற்று இடம் | செய்ய வேண்டிய பணி | சர்வே எண் |
|---|---|---|---|---|---|
| 1. | 1A | வழுதரெட்டி (பாளையம் ரோடு) | – | கழிவுநீர் தூக்கி எந்திர குழி – No.1049 (Lift Machine Hole) | 382/1 |
| 2. | 2B | ராஜராஜன் நகர் | சாலாமேடு (காவல்துறை குடியிருப்பு அருகில்) | பிரதான கழிவு நீரேற்று நிலையம்–3 | 298/2 |
| 3. | 5A | வசந்தம் நகர் | – | கழிவுநீர் தூக்கி எந்திர குழி – No.90 (Lift Machine Hole) | 52 பகுதி |
| 4. | 4 | எருமணந்தாங்கல் | – | கழிவுநீர் தூக்கி எந்திர குழி – No.716 (Lift Machine Hole) | 20 பகுதி |
| 5. | 5B | பானாம்பட்டு (பாலாஜி நகர்) | – | கழிவுநீர் தூக்கி எந்திர குழி – No.60 (Lift Machine Hole) | 278 பகுதி |
| 6. | 5B | வி.ஐ.பி சிட்டி | – | கழிவுநீர் தூக்கி எந்திர குழி – No.505 (Lift Machine Hole) | 658 பகுதி |

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம். (7907/2017/இ3)

**31.** விழுப்புரம் நகராட்சியில் வருவாய் அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.வி.சௌந்திரராஜன் என்பவரது ஓய்வுகால பணிக்கொடையில் காலம் கடந்த வரியினங்களுக்கான தொகை ரூ.12,02,755/–னை பிடித்தம் செய்து நகராட்சி வைப்பு நிதியில் வைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் ஓய்வு காலத்தில் வழங்கப்படும் பணிக்கொடையில் பிடித்தம் செய்த தொகையினை வழங்க கோரி மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் நகராட்சிக்கு எதிராக திரு.வி.சௌந்திரராஜன் ஓய்வு பெற்ற வருவாய் அலுவலரால் தொடரப்பட்ட வழக்கு W.P.No.17761/2020–ல் வழக்கு 28.03.2022–ல் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்காணும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து, மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.A.No.1415/2022–ல் அப்பீல் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.T.செழியன் நகராட்சி சார்பாக ஆஜராகிடவும், இதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/– மற்றும் இதர செலவினங்கள் ரூ.2,000/– ஆக மொத்தம் ரூ.17,000/– வழங்க கோரியுள்ள வழக்கறிஞர் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) வழக்கின் அவசர அவசியம் கருதி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (8795/2020/சி1)

**32.** அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.81 நாள்.20.05.2022–ன் படி இந்நகராட்சியில் சொத்துவரி சீராய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.03.08.2022–ல் நகராட்சி எல்லைக்குள் உள்ள அரசு மற்றும் அரசு சார்பு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியிலிருந்து 50% உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்திரவுபடி விழுப்புரம் நகராட்சி எல்லைக்குள் உள்ள அரசு கட்டிடங்கள் மற்றும் அரசு சார்பு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியிலிருந்து 50% உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

விழுப்புரம் நகராட்சி எல்லைக்குள் உள்ள அரசு மற்றும் அரசு சார்பு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியிலிருந்து 50% உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (1817/2022/அ1)

**33.** அரசானை எண்.240 நிதி (சம்பளம்) துறை நாள்.02.08.2019–ன் படி அரசு பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணம் ரூ.10000/–வழங்க அரசானை வழங்கப்பட்டுள்ளளது. அரசானை படி இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்ளுக்கு 2022–2023 ஆம் ஆண்டு பண்டிகை முன்பணம் ரூ.10000/– வீதம் வழங்கி பின்னர் ஊதியத்தில் பிடித்தம் செய்யவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u> (7038/2019/பி4)

குடிநீர் அல்லாத பிரிவிற்கு வருவாய் நிதிலிருந்தும் குடிநீர் பணியாளர்ளுக்கு குடிநீர் நிதியிலிந்து வழங்கிட மன்றம் அனுமதிக்களாம்.

**34.** நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.23124/ஆர்–1/2022–1 நாள்.23.09.2022 தேதிய கடிதத்தில் திரு.இராதாகிருஷ்ணன் பார்த்திபன், தன்னுடைய சமீபத்திய 'இரவின் நிழல்' திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க அரசை கேட்டுக் கொண்டதை தொடர்ந்து 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகளின் கேளிக்கை வரி சட்டத்தின் (Tamil Nadu Enterainment Tax Act, 2017) பிரிவு 11(1)–ன் படி கேளிக்கை வரி விலக்கு அளிக்க நகர்மன்ற தீர்மான முடிவினை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கேளிக்கை வரி சட்டப்பிரிவு 11(1)–ன் படி 'இரவின் நிழல்' திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) கேளிக்கை வரி சட்டப்பிரிவு 11(1)–ன் படி 'இரவின் நிழல்' திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க மன்றம் அனுமதிக்கலாம். (4678/2017/அ1)

**35.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கும் TN 32 AL 3961 வாகனத்திற்கு வாகன காப்பீட்டு காலம் செப்டம்பர் 2022ல் முடிவடையும் நிலையில் உள்ளதால், அதனை புதுப்பிக்க விழுப்புரம் தி நியூ இந்தியா அஷ்யுரன்ஸ் கம்பெனி லிட்.,(THE NEW INDIA ASSURANCE COMPANY LTD) அவர்களிடம் இருந்து ரூ.33658/- (ரூபாய் முப்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) தொகை செலுத்த கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட விவரப்படி காப்பீட்டு தொகை செலுத்தவும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். பொது சுகாதார நலன் கருதியும், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் வாகனத்திற்கு காப்பீடு செய்திட நியூ இந்தியா அஷ்யுரன்ஸ் கம்பெனி லிட்., (THE NEW INDIA ASSURANCE COMPANY LTD) என்ற நிறுவனத்திற்கு, தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(741/2014/எச்2)

**36.** விழுப்புரம் நகராட்சியில் வருவாய் அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.வி.சௌந்திரராஜன் என்பவரது ஓய்வுகால பணிக்கொடையில் காலம் கடந்த வரியினங்களுக்கான தொகை ரூ.12,02,755/-னை பிடித்தம் செய்து நகராட்சி வைப்பு நிதியில் வைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் ஓய்வு காலத்தில் வழங்கப்படும் பணிக்கொடையில் பிடித்தம் செய்த தொகையினை வழங்க கோரி மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.17761/2020 & W.M.P.22021 and 22022 of 2020ல் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு 28.03.2022-ல் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்காணும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து, மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.A.No.1415/2022-ல் அப்பீல் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் வழக்கில் மனுதார்ரது ஓய்வுகால பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகையினை 8 வாரங்களுக்குள் மனுதார்ருக்கு திரும்ப வழங்க மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 22.8.2022ல் தீர்ப்பளித்து உத்தரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்காணும் வழக்கில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.T.செழியன் நகராட்சி சார்பாக ஆஜராகியதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.13,000/- வழங்க கோரியுள்ள 25.08.2022ம் தேதிய வழக்கறிஞர் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) வழக்கின் அவசர அவசியம் கருதி தொகை வழங்க தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

( 8795/2020/சி1)

**37.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 சித்தேரிக்கரை கேஸ் குடோன் அருகில் உள்ள பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையத்தை பாதாள சாக்கடை பராமரிப்பு பணி செய்யவும், பழுதடைந்த மின்மோட்டாரை அவ்வப்போது சரிசெய்ய வெளியே எடுக்க வசதியாக கிரேன் பொருத்துதல், கழிவுநீர் கிணற்றை உயர்த்தும் பணி செய்தல், கிரில் கொண்டு கழிவுநீர் கிணற்றை மூடுதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு ரூ.9.90 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கு நகராட்சியின் குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம். (3715/2022/இ3)

**38.** இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், அனைத்து பிரிவு ஓட்டுநர்கள், மகப்பேறு உதவியாளர்கள், ஆயாக்கள், இரவு காவலர்கள், மற்றும் பிற பிரிவு அலுவலக உதவியாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 2022-2023 ம் ஆண்டுக்கான சீருடைகள் அரசு சார்புடை நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கிடவும், அதற்குண்டான செலவினத்தொகை மற்றும் சீருடைகளுக்கு உண்டான தையல் கூலி ரொக்கமாக வழங்கிடவும் இதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ.7.00 லட்சத்தை (ஏழு இலட்சம்) வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்

**39.** விழுப்புரம் நகராட்சி வடகிழக்கு பருவமழையில் இராகவன்பேட்டை மற்றும் ஆசிரியர் நகர் பகுதிகளில் வெள்ளம் போல் சூழ்ந்துள்ள மழைநீரை வெளியேற்ற Poclain இயந்திரம் மூலம் கால்வாயாக அமைத்து வெளியேற்றும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.95,000/- தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.K.இராஜா, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.94,806/-ஐ வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் பதிவு செய்யலாம். (6586/2021/இ2)

**40.** இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களது கடிதம் ந.க.எண்.139/2022/அ3, நாள்.19.09.2022 கடிதத்தில் நகராட்சிகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்களுக்கு விரிவாக்கப்பயிற்சி, வருவாய் உதவியாளர்களுக்கான பயிற்சி மற்றும் பணி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கான பயிற்சிக்கு இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக பணியாளர்களது பட்டியல் நகரியல் பயிற்சி நிறுவனம் மூலம் இந்நகராட்சிக்கு அவ்வப்போது அனுப்பி வைக்கப்பட்டு பணியாளர்கள் பயிற்சிக்கு அனுப்பி

வைக்கப்படுகின்றனர். இப்பயிற்சியில் கலந்துக்கொள்ளும் பணியாளர்களுக்கான பயிற்சி கட்டணம் கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்தால் தெரிவிக்கப்படும் கட்டணம் கேட்பு வரைவோலையாக அவ்வப்போது செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, மார்ச் 2023 வரை பயிற்சிக்கு செல்லும் பணியாளர்களுக்கான பயிற்சி கட்டணம் செலுத்துவதற்கான தோராய செலவினம் ரூ.2.00/– இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பயிற்சியின் அவசியம் கருதி கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(170/2021/சி1)

**41.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 நந்தனார் தெருவில் பாதாள சாக்கடையிலிருந்து கழிவுநீர் வெளியேறுவதால் அப்பகுதி பொதுமக்கள் பிரதான குழாயினை பழுது பார்க்குமாறு கோரிக்கை வைத்ததை தொடர்ந்து, மேற்கண்ட பகுதியில் பாதாள சாக்கடையை பழுது பார்த்து புதியதாக குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.1.25 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணியின் செலவினத்தை நகராட்சியின் குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம். (3715/2022/இ3)

**42.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வடகிழக்கு பருவமழை காரணமாக தாழ்வான வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை JCB இயந்திரம் மூலம் அகற்றிடும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.67,200/– தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s CPM Earth Movers, நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.65,869/–ஐ வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம். (6586/2021/இ2)

**43.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய பேருந்துகள் நுழைவுக் கட்டணம் வசூல் உரிமம் பெற்ற குத்தகைதாரர், திரு.S.தங்கம் சந்தோஷ் என்பவர் மேற்படி குத்தகை உரிமத்திற்கான 2020–2021–ம் ஆண்டிற்க்கு குத்தகை காலத்திற்கான தொகையினை முழுவதும் செலுத்தாமல் காலம் கடத்தி 2020–2021–ஆம் நிதியாண்டில் கொரோனா தொற்று நோயை குறிப்பிட்டு பொது முடக்கம் செய்யப்பட்டதால் பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்ட நிலையில் குத்தகைத் தொகையினை தள்ளுபடி செய்யக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No:5896/2021 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் கடந்த 08.07.2022–ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட தீர்ப்பின் மீது

மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து திரு.பி.முத்துக்குமார், மாநில அரசு வழக்கறிஞர் அவர்களிடம் உரிய சட்டகருத்துரு வழங்க கோரியதின் பேரில் சட்டகருத்துரு வழங்க கட்டணமாக ரூ.25,000/- வழங்க கோரி பட்டியல் வரபெற்றுள்ளது. சட்டகருத்துரு கட்டணத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) அவசர ஆவசியம் கருதி சட்டகருத்துரு வழங்க ரூ.25,000/- பட்டியல் தொகை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(9391/2017/அ1)

**44.** விழுப்புரம் நகராட்சியில் நூற்றாண்டு விழா சிறப்பு நிதி மற்றும் தேசிய மீன் வள மேம்பாட்டு நிதியின் கீழ் அனிச்சம்பாளையம் பகுதியில் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன வசதிகள் கொண்ட மீன் அங்காடி அமைத்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட இடத்தில் ETP அமைத்திடவும் மற்றும் மீன் அங்காடிக்குள் வாகனங்கள் வந்து செல்ல மீன் அங்காடிக்குள்ளே சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் மேற்கண்ட பணிகளுக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டதில் கூடுதலாக ரூ.58.40 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, அனிச்சம்பாளையம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நவீன மீன் அங்காடியில் ETP அமைத்திடவும் மற்றும் சாலை அமைத்திடவும் ரூ.58.40 இலட்சத்தில் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், அதற்கான பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் வழியாக அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் வழியாக பிரேரணை சமர்ப்பிக்கலாம். (5144/2019/இ1)

**45.** விழுப்புரம் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அவர்களின் கடிதம் ந.க.எண்.2791/அ4/2022 நாள். 12.08.2022 ல் விழுப்புரம் சுகாதார மாவட்டத்தில் பருவமழைகாலம் தொடங்கி அவ்வப்போது மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பொது மக்கள் டெங்கு காய்ச்சல் மற்றும் மலேரியா போன்ற நோய்த் தொற்றுகளால் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர். எனவே விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தற்காலிக அடிப்படையில் போதுமான அளவு களப்பணியாளர்கள் பணி நியமனம் செய்து நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

டெங்கு ஒழிப்பு பணியில் (DBC) மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் பயன்படுத்தப்பட்டனர். இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜே1 நாள்.17.09.2018 ன் படி DBC பணிக்கு Outsourcing முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியில் ஈடுபடுத்த வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

எனவே இந்நகராட்சிக்கு கீழ்கண்ட அளவுகோலின்படி DBC பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

1. நகராட்சியில் மொத்த குடியிருப்புகள் எண்ணிக்கை –34936
2. 300 குடும்பங்களுக்கு 1 DBC பணியாளர் வீதம் (34936/300) –116 பணியாளர்கள்

தற்போது DBC பணியாளர்களுக்கு ஊதியம் நாளொன்றுக்கு ரூ.400/– என மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். அ4/3034/2019 நாள்.15.08.2022 ல் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

எனவே இந்நகராட்சியில் மழைக்காலம் வருவதால் 116 DBC பணியாளர்கள் தேவைப்படும்பட்சத்தில், நகராட்சி பணியாளர்கள் பயன்படுத்தியது போக மீதம் 60 DBC பணியாளர்களை Outsourcing முறையில் பணியில் ஈடுபடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதற்காகும் உத்தேச செலவினம் 60 நாட்களுக்கு ரூ.17,00,000/–ஐ வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. முதற்கட்டமாக 60 நாட்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், பணித்திறன் மதிப்பீடு செய்து தேவைப்பட்டால், மீண்டும் மேலும் 60 நாட்களுக்கு நீட்டிப்பு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேலும் ஒப்பந்ததாரருக்கு நிர்வாக செலவினம் 3 சதவீதம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4.பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம் (6789/2020/எச்1)

**46.** விழுப்புரம் மாவட்டத்தின் திட்டப்பணிகளை ஆய்வு செய்ய நியமனம் செய்யப்பட்ட கண்காணிப்பு அலுவலர் (Monitoring Officer) 21.09.2022 அன்று மாவட்டத்தில் ஆய்வு செய்த போது பள்ளிகளில், பள்ளி வளாகம் தூய்மையாக இல்லாததும் பள்ளிக்கழிவறைகள் சரிவர சுத்தம் செய்யப்படாமல் உள்ளதையும் அறிந்து மாவட்ட ஆட்சியர் தலைமையில், முதன்மை கல்வி அலுவலர் அவர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தி முறைப்படுத்திட தெரிவித்ததை தொடர்ந்து, மதிப்புமிகு மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் 22.09.2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்காணும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

1. முதன்மை கல்வி அலுவலர், விழுப்புரம்
2. நகராட்சி ஆணையர், விழுப்புரம்
3. திட்ட அலுவலர், (ஊரக வளர்ச்சி )விழுப்புரம்
4. திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்), விழுப்புரம்
5. உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), விழுப்புரம்
6. மாவட்ட கல்வி அலுவலர்கள் (விழுப்புரம், திண்டிவனம் மற்றும் செஞ்சி)
7. உதவி திட்ட அலுவலர் (SS) , விழுப்புரம்
8. அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், விழுப்புரம் மாவட்டம்
9. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், விழுப்புரம் மாவட்டம்

மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட குறிப்புகளை முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1400/2022/ஆ5 நாள்.28.09.2022–ன் படி கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**ஆய்வுக்கூட்ட குறிப்புகள்.**

- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளை எதிர் வரும் 24.09.2022 (சனிக்கிழமை) அன்று தூய்மைப்படுத்துவதற்கான ஆலோசனைகள் மதிப்புமிகு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது.
- ஒவ்வொரு வட்டார அளவிலும் Nodal Officer நியமிக்கப்பட்டு மேற்காண் பணியினை திறம்படச் செய்யவேண்டும் என்றும் மதிப்புமிகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.
- மேலும், விழுப்புரம் நகராட்சிக்கு உட்பட்ட, விழுப்புரம் நகராட்சியால் நடைமுறைப்படுத்தப்பட்ட பள்ளிக் கட்டிடங்களின் வகைகள் மற்றும் அதனுடைய தற்போதைய நிலை குறித்த ஆராயப்பட்டது.
- பள்ளிகளை தூய்மை செய்வதற்கான பணியினை அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்களும் வட்டார அளவில் தங்கள் ஆளுகைக்குட்பட்ட தலைமையாசிரியர்களுக்கு 23.09.2022 அன்று ஆய்த்தக் கூட்டம் நடைபெறச் செய்ய வேண்டும்.
- மேலும், 100 நாள் வேலைத் திட்டப் பணியாளர்களை கொண்டு எதிர்வரும் 24.09.2022 அன்று காலை 7.00 மணி முதல் அனைத்து பள்ளிகளில் வளாகம் மற்றும் கழிவறைகளை தூய்மை செய்ய வேண்டும் என்றும் மதிப்புமிகு மாவட்ட ஆட்சியர் அவர்களால் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.
- இப்பணியினை மூன்று மாவட்டக்கல்வி அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்பார்வையிட்டு அதற்குரிய படிவத்தினை பூர்த்தி செய்து தருமாறும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.
- நகராட்சிகளை பொருத்தவரை பள்ளிகளின் தேவைக்கேற்ப கழிவறை மற்றும் தூய்மை பணி மேற்கொள்ள நகராட்சி ஆணையர், முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களிடம் ஆலோசனை செய்து தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கையை கருத்துரு சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.
- நகராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த தினக் கூலி அடிப்படையில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அளித்த மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் (Outsourcing ) ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து எவ்வித புகார்களுக்கு இடமளிக்காமல் கண்காணிக்க அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட ஆய்வுக்கூட்ட குறிப்புகளுடன் கீழ்கண்ட விவரப்படி அரசு/நகராட்சி தொடக்கப்பள்ளிகளில் கீழ்கண்ட விவரப்படி தூய்மை பணியாளர்கள் நியமிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பள்ளியின் பெயர் இடம் | மாணவர்கள் எண்ணிக்கை | | | தேவைப்படும் பணியாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| 1 | அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி, திரு.வி.க வீதி | 148 | 3856 | 4004 | 5 |
| 2 | திரு.காமராஜர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி, சங்கரமடத்தெரு | 1019 | 0 | 1019 | 2 |
| 3 | நகராட்சி ஆரம்ப பள்ளி, B.N தோப்பு | 71 | 70 | 141 | 2 |
| 4 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி, B.N தோப்பு | 925 | 414 | 1339 | |
| 5 | நகராட்சி ஆரம்பபள்ளி , கீழ்பெரும்பாக்கம் | 167 | 158 | 325 | 2 |
| 6 | அரசு மேல்நிலைப்பள்ளி, கீழ்பெரும்பாக்கம் | 786 | 394 | 1180 | |
| 7 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ஆஸ்பிட்டல் ரோடு | 192 | 195 | 387 | 2 |
| 8 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ஆஸ்பிட்டல் ரோடு | 230 | 171 | 401 | |
| 9 | நகராட்சி துவக்கப் பள்ளி , காமராஜர் வீதி | 3 | 7 | 10 | |
| 10 | உருது துவக்கப் பள்ளி , காமராஜர் வீதி | 3 | 6 | 9 | |
| 11 | நகராட்சி தொடக்கப்பள்ளி, பூந்தோட்டம் | 203 | 190 | 393 | 2 |
| 12 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, பூந்தோட்டம் | 501 | 243 | 744 | |
| 13 | அரசு ஆதிதிராவிடர் ஆரம்பப்பள்ளி, வழுத ரெட்டி காலணி | 55 | 51 | 106 | 1 |
| 14 | அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி வழுத ரெட்டி காலணி | 106 | 104 | 210 | |
| 15 | ஊராட்சி ஒன்றிய பள்ளி, எருமணந்தாங்கள் | 7 | 14 | 21 | 1 |
| 16 | ஊராட்சி ஒன்றிய பள்ளி, M.குச்சிப்பாளையம் | 10 | 8 | 18 | |
| 17 | ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, பாணாம்பட்டு | 16 | 29 | 45 | 1 |
| 18 | ஆதிதிராவிடர் ஆரம்பப்பள்ளி, பாணாம்பட்டு, | 29 | 30 | 59 | |
| 19 | நகராட்சி நடுநிலைப்பள்ளி, சாலாமேடு | 134 | 140 | 274 | 1 |
| 20 | ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, ஆசாகுளம் | 21 | 22 | 43 | |
| 21 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி , காகுப்பம் | 63 | 65 | 128 | |
| 22 | ஊராட்சி ஆரம்பப்பள்ளி, வ.பாளையம் | 18 | 17 | 35 | 1 |
| 23 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வழுதரெட்டி | 47 | 61 | 108 | |
| | மொத்தம் | 4754 | 6254 | 10999 | 20 |

மேற்கண்ட 23 அரசு/நகராட்சி பள்ளிகளுக்கு 20 தூய்மை பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் ( Out sourcing ) ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் தூய்மை பணியாளர் நியமனம் செய்ய செலவின விவரம் வருமாறு.

செலவின விவரம்

| வ.எண் | ஒரு தூய்மை பணியாளருக்கு ஒரு நாளுக்கான செலவின பட்டியல் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் தினக்கூலி பட்டியல் படி ஒரு தூய்மை பணியாளருக்கு ஒரு நாளுக்கான 2022-2023 ஆண்டுக்குரிய தினக்கூலி | 460.00 |
| | ESIC 3.25% | 14.95 |
| | EPF 13% | 59.80 |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 7% (சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் Sanitary Materials உட்பட ) | 32.20 |
| | 1 தூய்மை பணியாளருக்கு 1 நாளுக்குரிய செலவினம் | 566.95 |
| | 20 தூய்மை பணியாளர்களுக்கு 180 பள்ளி வேலை நாட்களுக்கு (அக்டோபர்-22 முதல் மே-2023 வரை) செலவினம் (566.95X180X20) | ரூ.2041020/- |

எனவே 20 தூய்மை பணியாளர்களுக்கு ஒரு நாளுக்குரிய செலவினம் ரூ.566.95/- ஆகும். 2022-2023 ம் கல்வியாண்டிற்கு 180 பள்ளி வேலை நாட்களுக்கு ரூ.2041020/- ஆகும். அரசாணை நிலை எண்.166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை நாள் 23.11.2016 ல் மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள அனுமதி அளித்துள்ளது. எனவே விழுப்புரம் நகராட்சி பகுதியில் உள்ள மேற்கண்ட அரசு/நகராட்சி பள்ளிகளுக்கு 20 தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியில் ஈடுபடுத்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.21/- இலட்சத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(287/2020/எச்1)

**47.** விழுப்புரம் நகராட்சியில் Food Service Providers for Providing Morning Breakfast to the kamarajar municipal higher secondary school ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 16.08.2022-ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | M/s Jeevan Park, Mundiyampakkam, Villupuram. | -1.65 % குறைவு |
| 2 | M/s Sri Krishna Catering Services, Kapiyampuliyur, Villupuram. | 2.28 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -1.65 % குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Jeevan Park நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

வேலையின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4641/2022/சி3)

**48.** விழுப்புரம் நகர பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பயணியர் விடுதி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, கிழக்கு பாண்டி ரோடு நரசிங்கபுரம், அலமேலுபுரம், காமராஜர் பள்ளி மைதானம், திரௌபதியம்மன் கோவில் மற்றும் 5 ஊராட்சி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் வழங்கப்படும் குடிநீரினை தரப்பரிசோதனை (Physical, Chemical & Biological) மாதம் தோறும் சோதனை செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கட்டணமாக செலுத்த தோராய செலவினமாக தொகை ரூ.30,000/–க்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். ( 4698/2022/இ2)

**49.** விழுப்புரம் நகராட்சியில் Food Service Providers for Providing Morning Breakfast to the Narasingapuram main road near OHT tank ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 16.08.2022–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | M/s Jeevan Park, Mundiyampakkam, Villupuram. | –1.65 % குறைவு |
| 2 | M/s Sri Krishna Catering Services, Kapiyampuliyur, Villupuram. | 2.28 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட –1.65 % குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Jeevan Park நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

வேலையின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4641/2022/சி3)

**50.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண்.16118/2022/CFC–1, நாள்.26.08.2022–ல் சட்டமன்ற அறிவிப்பு எண்.16 நகரத்தில் காற்றோட்டமான பகுதிகளில் Lung Space அதிகரிக்கும் நடவடிக்கையாக 124 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேக்கத் திடக்கழிவுகளை Biomining முறையில் அகற்றி மீட்கப்பட்டுள்ள 369 ஏக்கர் நிலத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற காடுகள் உருவாக்குதல் திட்டத்தின் கீழ் விழுப்புரம் நகராட்சிக்கு 2.50 ஏக்கர் பரப்பளவில் 1124 மரங்களை நடுவதற்கு ரூ.3.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான அய்யன்கோவில்பட்டில் உள்ள உரக்கிடங்கில் தேக்கத் திடக்கழிவுகளை Biomining முறையில் அகற்றி மீட்கப்பட்டுள்ள 2.50 ஏக்கர் பரப்பளவில் 1124 மரங்களை நடுவதற்கு ரூ.3.24 இலட்சத்தினை 15–வது நிதிக்குழு மானியம் 2022–23–ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.

2. மேலும் மேற்காணும் பணியினை 15–வது நிதிக்குழு மானியம் 2022–23–ன் கீழ் செலவினம் மேற்கொள்ளவும், திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6993/2022/இ1)

**51.** தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2022–23–ன் கீழ் விழுப்புரம் நகராட்சிக்கு ரூ.750.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.6645/2022/இ1, நாள்.18.08.2022 அன்று முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.கஎண்.24826/2022/SS2, நாள்.07.09.2022 கடிதத்தில் விழுப்புரம் நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2022–23–ன் கீழ் ரூ.750.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகளை கீழ்காணும் விவரப்படி ஏழு சிப்பங்களாக மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் மீ | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | <u>சிப்பம்–I</u><br>Providing Block topping surface road at MGD Nagar 1st corss, MDG nagar, Gandhi nagar Main Road, Ragavendra Nagar Main Road, Vallalar 3rd street A, Vallalar 3rd street B, Vallalar 2nd street, Vallalar 1st street, Mariyamman koil street 1st Street, Mariyamman koil street 2st Street, South street 1st Cross & Raghavendra nagar 1st Street and Providing Cement concrete road at MGR nagar, Gandhi nagar A, Gandhi nagar cr street B, Gandhi nagar B, Gandhi nagar C, Chinna pillaiyar kovil street 1st street at ward no 4 & 42 in Villupuram municipality | 2.55 | 94.78 |
| 2 | <u>சிப்பம்–II</u><br>Providing Block topping surface road at Krishna nagar 2st Street, Indira nagar Main Road, Indira nagar, Indira nagar 5 th Cross A, Indira nagar 5 th Cross B, Indira nagar 3rd Cross, Indira nagar 2 CROSS and Providing Cement concrete road at Krishna nagar 1st Street, Krishna nagar 3st Street, Krishna nagar 4th Street, Krishna nagar 5th Street, Thirukuripu thondar nagar 2nd Street, Thirukuripu thondar 4th street nagar, Thirukuripu thondar nagar 3rd street, Thirukuripu thondar nagar 5th street, Thirukuripu thondar nagar 1 street, Indira nagar in ward no 5,6 &7 in Villupuram municipality. | 2.04 | 99.10 |

| | | | |
|---|---|---|---|
| 3 | <u>சிப்பம்–III</u><br>Providing Block topping surface road at Kamban nagar main road, Kamban nagar Bharathiyar street, Kamban nagar 1st cross Bharathiyar street , Kamban nagar 2nd Street, Ganesh nagar main road, Ganesh nagar main road and Providing Cement concrete road at Ganapati nagar road, Ganapathi Nagar Extension, Ganapathi Nagar Extension 3rd street, Ganapathi Nagar Extension 2rd street, Ganapathi Nagar Extension 1st street, Ganapathi Nagar Extension , Thiru nagar 1cr street, Thiru nagar Lane in ward no 27 & 30 in Villupuram municipality. | 2.34 | 121.39 |
| 4 | <u>சிப்பம்–IV</u><br>Providing Block topping surface road at Muthiyal Nagar Main Road, Muthiyal nagar 2, 3rd Street, Muthiyal nagar 1st Street, Highways nagar A, Highways nagar B, Highways nagar, Highways nagar, KK nagar main road, East VGP nagar 1st street, VGP nagar West Street and Providing Cement concrete road at Imayam 2nd street, VGP nagar 2, Kamarajar street, Jagadesh street, Vallalar street, Thiruvalluvar street, Periyar street in ward no 31 & 32 in Villupuram municipality. | 2.79 | 155.73 |
| 5 | <u>சிப்பம்–V</u><br>Providing Block topping surface road at Jagannathan Police nagar Main, Jaganathan 6th Cross Street Police nagar, Jaganathan 5th Cross Street Police nagar, Jeganathan police nagar 1, Jeganathan police nagar 2nd cross street, Jeganathan police nagar 3, Jaganathan police nagar, Ezhil nagar 2nd street, Gowtham nagar 4th Street, Gowtham nagar 1st Street, Gowtham nagar Main Road, NSK Nagar Main Road, NSK nagar 2nd Street, NSK nagar Extension, NSK Nagar Street and Providing Cement concrete road at Ezhil nagar 2, Ezhil nagar 6th Street in ward no 34 & 36 in Villupuram municipality. | 2.18 | 104.16 |
| 6 | <u>சிப்பம்–VI</u><br>Providing Block topping surface road at Balaji nagar 1st Street, Balaji nagar 2nd Street, Balaji nagar 3rd Street, Balaji nagar 4th Street, Ragavanpettai Mariamman kovil Street, Abhitha garden, Abhitha garden, Abhitha garden 2nd street, Abhitha garden, Angallamman Kovil St and Providing Cement concrete road at Ganapatih nagar, Kambar 7th street in ward no 37 & 39 in Villupuram municipality. | 2.07 | 77.81 |
| 7 | <u>சிப்பம்–VII</u><br>Providing Block topping surface road at Meenakhi nagar 4th Cross, Meenakhi nagar 3rd Cross, Meenakhi nagar 2nd Cross, Meenakshi nagar–6th Cross, Meenakshi nagar 5TH Cross A, Meenakshi nagar 5TH Cross B, Periyar nagar, Thanthai Periyar road 2nd Main road, Thanthai Periyar nagar mainroad A, Cauvery square 1st Street, Cauvery square 2nd Street & Annai teresa nagar in ward no 40 & 41 in Villupuram municipality. | 2.03 | 97.03 |
| | மொத்தம் | 16.00 | 750.00 |

மேற்கண்ட திட்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:–**</u>

மேற்காணும் சாலை பணிகள் ஏழு சிப்பங்களாக TURIP 2022–23 நிதியின் கீழ் மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு திட்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6645/2022/இ1)

**52.** 15–வது நிதிக்குழு மான்யம் 2022–23–ன் கீழ் விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான அய்யன்கோவில்பட்டில் உள்ள உரக்கிடங்கில் தேக்கத் திடக்கழிவுகளை Biomining முறையில் அகற்றி மீட்கப்பட்டுள்ள 2.50 ஏக்கர் பரப்பளவில் 1124 மரங்களை நடுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண்.16118/2022/CFC–1, நாள்.26.08.2022–ல் ரூ.3.24 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 15.09.2022 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.ராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.3,22,723/– | –0.31 % குறைவு |
| 2 | M/s SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.3,26,258/– | 0.78 % அதிகம் |

எனவே, திரு.K.ராஜா என்பவர் மதிப்பீட்டை விட –0.31 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (6993/2022/இ1)

**53.** தூய்மை இந்தியா இயக்கம் (நகரம்) 2.0 2022–23–ன் கீழ் விழுப்புரம் நகராட்சி ஜி.ஆர்.பி தெருவில் புதியதாக சிறுநீர் கழிப்பிடம் உள்ளிட்ட பொதுக்கழிப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.18856/2022/தூஇதி2, நாள்.13.07.2022–ல் ரூ.31.28 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 08.08.2022 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.25,45,625/– | –0.04 % குறைவு |
| 2 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | ரூ.25,80,243/– | 1.32 % அதிகம் |

எனவே, திரு.R.நாகராஜ் என்பவர் மதிப்பீட்டை விட –0.04 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை ஏற்று அரசு பணி என்பதால் அவசியத்தை கருதி வேலை உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்திடலாம். (6981/2021/இ1)

**54.** மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்கள் அ6/3071/2022 எண்ணிட்ட 15.07.2022 தேதியிட்ட கடிதத்தில் விழுப்புரம் நகராட்சியில் 75-வது சுதந்திரதிருநாள் அமுதப்பெருவிழாவினை முன்னிட்டு அரசின் உத்தரவின்படி 11.08.2022 முதல் 17.08.2022 வரை அனைத்து வீடுகள் /வணிக நிறுவனங்கள் / அரசு கட்டிடங்கள் மற்றும் அனைத்து இதர கட்டிடங்களில் தேசிய கொடி ஏற்றி சிறப்பாக கொண்டாட தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் சுமார் 37000 வீடுகள் உள்ளன. 75-வது சுதந்திர திருநாளை சிறப்பாக கொண்டாட அனைத்து வீட்டுகள் /வணிக நிறுவனங்கள் / அரசு கட்டிடங்கள் மற்றும் அனைத்து இதர கட்டிடங்களில் தேசிய கொடி ஏற்ற அரசு உத்தரவிட்டுள்ளதால் இந்நகராட்சி சார்பாக அனைத்து வீடுகள் /வணிக நிறுவனங்கள் / அரசு கட்டிடங்கள் மற்றும் அனைத்து இதர கட்டிடங்களில் ரூ.18/- விலையில் நகராட்சியால் தேசிய கொடி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால், தேசிய கொடிகள் 18InchX12Inch அளவுகளில் சப்ளை செய்ய M/s Shine Textile, Knit Fabrics& Garment Exporters, 52, Kumar Nagar, Valayankadu Main Road, Tirupur-641603 என்ற நிறுவனம் கொடி ஒன்றுக்கு ரூ.18/- என நிர்ணயம் செய்து அனுப்பியுள்ளது.

மேற்கண்ட கொடிகளை சப்ளை அவசர அவசியம் கருதி 1920 தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டப்பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு 25000 எண்ணிக்கை கொடிகள் சப்ளை செய்தமைக்கு ரூ.450000/- யை வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(6262/2022/எச்2)

**55.** விழுப்புரம் நகராட்சியில் காமராஜர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ரூ.23.60 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக சமுதாய சமயற்கூடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 26.07.2022-ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.S.கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.22,93,273/- | -0.17 % குறைவு |
| 2 | திரு.M.ஆறுமுகம், ஒப்பந்ததாரர். | ரூ.23,22,610/- | 1.10 % அதிகம் |

எனவே, திரு.S.கோவிந்தராஜ் என்பவர் மதிப்பீட்டை விட -0.17 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(4641/2022/**சி**3)

**56.** விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலகத்திற்கு செல்வதற்கு தேவையான மேசைகள், நாற்காலிகள், நான்கு இருக்கை கொண்ட நாற்காலிகள், பிளாஸ்டிக் சேர்கள் மற்றும் தளவாட பொருட்கள் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 18.08.2022–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.21,72,240/– | –0.10 % குறைவு |
| 2 | திரு.S.கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.22,03,600/– | 1.34 % அதிகம் |

எனவே, திரு.R.நாகராஜ் என்பவர் மதிப்பீட்டை விட –0.10 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(5144/2019/இ1)

**57.** மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களின் ந.மு.க.சி1/1872/2022, நாள்.24.09.2022 கடிதத்தில் விழுப்புரம் நகரம் காமராஜர் வீதி மற்றும் திரு.வி.க வீதி சந்திப்பில் 1982–ஆம் ஆண்டு முதல் இருந்த தந்தை பெரியார் சிலை மீது கன்டெய்னர் லாரி ஒன்று எதிர்பாராத விதமாக மோதியதில் மேற்படி தந்தை பெரியார் சிலை கீழே விழுந்து முற்றிலும் சேதமடைந்த சிலை அன்றே அகற்றப்பட்டதை பல்வேறு அரசியல் கட்சியனர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கிணங்க மீண்டும் அதே இடத்தில் தந்தை பெரியார் சிலை அமைக்க விழுப்புரம் நகர மன்ற தீர்மானத்துடன் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜர் வீதி மற்றும் திரு.வி.க.வீதி சந்திப்பில் 1982–ஆம் ஆண்டு முதல் இருந்த உயரம் 5 அடி மற்றும் 5.5 அடி கொண்ட தந்தை பெரியார் சிலை மீது 19.01.2022 அன்று இரவு கன்டைனர் லாரி எதிபாராத விதமாக மோதியதில் மேற்படி தந்தை பெரியார் சிலை கீழே விழுந்து முற்றிலும் சேதமடைந்ததால் மேற்படி சேதமடைந்த பெரியார் சிலை அன்றே அகற்றப்பட்டது. தந்தைபெரியார் சிலை இருந்த இடமானது வார்டு எ, பிளாக் 45, நகரளவு எண்.41, விஸ்திரனம் 2900 சதுர மீட்டர், காமராஜர் தெரு என நகரளவு ஆவணங்களில் உள்ளது.

இந்நிலையில், மேற்படி எதிர்பாராத நிகழ்வின் காரணமாக, தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளான திராவிட முன்னேற்ற கழகம், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், விடுதலைச் சிறுத்தைகள், திராவிடர் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மீண்டும் அதே இடத்தில் தந்தை பெரியார் சிலையை நிறுவ வேண்டும் என வலியுறுத்தி பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்.

பல்வேறு அரசியல் கட்சியினர்களின் கோரிக்கையின் பேரிலும், பொதுமக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த தந்தை பெரியார் சிலை எதிர்பாராத விபத்து காரணமாக சேதமடைந்து விட்டதாலும், சிறப்பினமாக கருதி, சேதமடைந்த தந்தை பெரியார் சிலை ஏற்கனவே அமைந்திருந்த காமராஜர் வீதி மற்றும் திரு.வி.க.வீதி சந்திப்பிலிருந்து அதன் அருகாமையில் திரு.வி.க.வீதியின் ஓரத்தில் (கிழக்கு பகுதியில்) போக்குவரத்துக்கு இடையூன்றி மீண்டும் தந்தை பெரியார் வெண்கல சிலை நிறுவ அரசுக்கு முன்மொழிவினை அனுப்பி உரிய அனுமதி பெறுவது குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு வரப்பெற்ற கோரிக்கையினை பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்கண்ட திரு.வி.க. வீதியின் அகலம் வடப்புறத்தில் 47.57 அடியாகவும் (14.50 மீட்டர்) தென்புறத்தில் 32 அடியாகவும் (10 மீட்டர்) சிமெண்ட் சாலையாக நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண். RAVII(1)/1946/2019, நாள்.26.03.2019–ல் சிலை வைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவித்துள்ளபடி வெண்கல சிலையினை மட்டுமே நிறுவ வேண்டும் எனவும், அவ்வாறு வெண்கல சிலையினை நிறுவிட ஏற்படும் செலவுகளுக்கான 100 சதவீதம் தொகைக்கு நிகரான தொகையினை மேற்படி சிலை பராமரிப்பிற்காக சிலை நிறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வெண்கல சிலை நிறுவவுள்ள திராவிட முன்னேற்ற கழக மத்திய மாவட்ட செயலாளர் மற்றும் விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.நா.புகழேந்தி அவர்களிடம் உறுதிமொழி ஆவணம் பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

மேற்படி தந்தை பெரியார் முழு உருவ வெண்கல சிலையை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் விழுப்புரம் நகராட்சியின் பொதுமக்கள் பயன்படுத்தும் பொதுப்பாதையாக இருப்பினும், இப்பாதை வழியாக கனரக வாகனங்கள் செல்வது கிடையாது. ஏற்கனவே, 1982–ம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார் சிலை காமராஜர் வீதி மற்றும் திரு.வி.க வீதி என இரண்டு சாலைகள் சந்திக்கும் இடத்தின் மத்தியில் போக்குவரத்திற்கு சற்று இடையூறாகவே 40 ஆண்டுகளாகவே இருந்தது. தற்போது சாலை ஓரத்தில் போக்குவரத்திற்கு இடையூறுகள் இல்லாமல் தந்தை பெரியார் முழு உருவ வெண்கல சிலை மீண்டும் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதால், இதனை சிறப்பினமாக கருதி விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு ஏ, பிளாக் 46, நகரளவு எண்.57–ல் திரு.வி.க. வீதியின் கிழக்கு பகுதியில் தந்தை பெரியார் முழு உருவ வெண்கல சிலை நிறுவ அனுமதி வழங்க மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்கள் வழியாக அரசுக்கு உரிய பிரேரணைகள் சமர்ப்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

திரு.வி.க. வீதியின் கிழக்கு பகுதியில் தந்தை பெரியார் முழு உருவ வெண்கல சிலை மீண்டும் நிறுவ மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்கள் வழியாக அரசுக்கு உரிய பிரேரணைகள் அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

(338/2022/எப்1)

**58.** வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில், விழுப்புரம் நகராட்சி பகுதிகளில் 42 வார்டுகளில் உள்ள பழுதடைந்த சாலைகளால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளதால், குண்டும் குழியுமாக பகுதிகளில் Cement concrete patch work செய்தும், மழைநீர் வடிகால் சேதமடைந்த பகுதிகளில் மழைநீர் வெளியேறாத வகையில் சரி செய்வதற்கும், சிறுபாலம் பழுதடைந்த பகுதிகளை சரி செய்து, சாய்தளம் (Ramp) அமைக்க வேண்டியுள்ளது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதற்கான தோராய செலவினம் ரூ.9.40 இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**59.** இந்நகராட்சிக்கு சொந்தமனை கீழ்காணும் இடங்களில் உள்ள கடைகள் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) அரசாணை (இருபதாண்டுகள்) எண்.147, நாள்.30.12.2000–ன் படியும் மற்றும் அரசாணை நிலை எண்.92, நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.07.2007–ன் படி 31.03.2019–இல் 9 ஆண்டுகள் முடிவுற்ற குத்தகை இனங்களுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்து அடுத்து 9 ஆண்டுகள் கொண்ட தொகுப்பில் முதல் மூன்றாண்டுகளுக்கு 01.09.2019 முதல் வாடகை உயர்வு செய்து 31.08.2022 வரை குத்தகை புதுப்பித்து வழங்கப்பட்டது. தற்போது 2–வது மூன்றாண்டு தொகுப்பாக 01.09.2022 முதல் கடைகளின் குத்தகைதாரர்கள் அரசாணை நிபந்தனைகள் நிறைவு செய்துள்ளபடியால் கீழ்காணும் வாடகைக்கு உட்பட்டு உரிமம் புதுப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் விவரம் திருவாளர்கள் | கடை எண் | வரி விதிப்பு எண் | 31.08.2022 –ல் வாடகை | 15% உயர்வு தொகை | 01.09.2022– ல் உயர்வு செய்யப்பட்ட தொகை | கூடுதல் வைப்புத் தொகை | உரிமம் நீட்டிப்பு கட்டணம் | செலுத்து சீட்டு எண் | நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அங்காளம்மன் கோவில் தெரு | | | | | | | | | | |
| 1 | ஜெயபிரகாஷ் | 6 | 044/764 | 2119 | 318 | 2437 | 3816 | 1000 | 044/VM1/1/22–23/0000278 | 8-Apr-22 |
| 2 | முகிலன், | 7 | 044/765 | 2119 | 318 | 2437 | 3816 | 1000 | 044/VM1/1/22–23/0000277 | 8-Apr-22 |

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்

**60.** விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் ஆவின் பாலகம் அமைத்திட பொது மேலாளர், விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்கத்தியாளர்கள் ஒன்றியம் லிமிட்ட விழுப்புரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1957/பா.வி–1/2016, நாள்.18.04.2022–ல் அனுமதி கோரப்பட்டுள்ளது.

விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் ஆவின் பாலகம் அமைத்திட பொதுப்பணி துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு எற்படாவண்ணம் அனுமதிக்கப்பட்டுள்ள இடத்தினை மட்டும் பயன்படுத்திக்கொள்ள ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| எண் | அனுமதி கோரிய இடம் | சர்வே எண். |
|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக வளாகம்<br>ஆஸ்ப்பிட்டல் ரோடு '10X'10 | வார்டு A, பிளாக் 4 ,<br>நகரளவு எண்.27<br>பழைய சர்வே எண்.3511/A பகுதி |

விழுப்புரம் நகராடசி புதிய அலுவலக வளாகத்தில் ஆவின் பாலகம் (Stall) அமைக்க கீழ்கண்ட விவரப்படி மாத வாடகை, வைப்பு தொகை மற்றும் 12 மாத கூடுதல் வைப்புத்தொகை நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ . .எண் | அனுமதி கோரிய இடம் | மாத வாடகை ரூ. | வைப்பு தொகை ரூ. | மாத 12 வாடகை கூடுதல் வைப்பு தொகை ரூ. | செலுத்த வேண்டிய வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6=5+4 |
| .1 | நகராட்சி அலுவலக வளாகம் ஆஸ்ப்பிட்டல் ரோடு '10X'10 | 3500, | 50,000 | 42000, | 92000, |

மேற்காணும் இடத்திற்கு தொகை செலுத்தும் பட்சத்தில் குத்தகை விதிகளின்படி ஒப்படைத்து பொது மேலாளர், ஆவின் என்ற பெயரில் கேட்பு எழுப்பி வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் ஆவின் பாலகத்திற்கு மாத வாடகை, வைப்பு தொகை மற்றும் 12 மாத கூடுதல் வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க தொகை செலுத்தும் பட்சத்தில் குத்தகை விதிகளின்படி ஒப்படைத்து பொது மேலாளர், ஆவின் என்ற பெயரில் கேட்பு எழுப்பி வசூலிக்க மன்ற அனுமதிக்கலாம்.

**61.** விழுப்புரம் நகராட்சியில் நரசிங்கபுரம் OHT அருகில் ரூ.23.60 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக சமுதாய சமயற்கூடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 26.07.2022–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.M.ஆறுமுகம், ஒப்பந்ததாரர். | ரூ.22,95,289/– | –0.09 % குறைவு |
| 2 | திரு.**S.**கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.23,34,706/– | 1.63 % அதிகம் |

எனவே, திரு.M.ஆறுமுகம் என்பவர் மதிப்பீட்டை விட –0.09 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். (4641/2022/சி3)

**62.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–V(1)) அரசாணை நிலைஎண். 153, நாள். 25.11.2019ன்படி விழுப்புரம் நகராட்சிக்கு நூற்றாண்டு விழா சிறப்பு நிதியின் கீழ் ரூ.291.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலைய வளாகம் மேம்பாடு செய்யும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.J.முருகன் என்பவருக்கு விலைக்குறைப்பு மூலம் (மதிப்பீட்டை விட 3% அதிகம்) ரூ.2,90,64,184/–க்கு (GST உட்பட) பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்றது. மேற்காணும் புதிய பேருந்து நிலைய மேம்பாட்டு பணியில் பொது கழிப்பிடம் கட்டுதல், வாகன நிறுத்துமிடத்திற்கு மேற்கூரை அமைத்தல், பேருந்து உள்ளே வெளியே செல்லும் பகுதியில் நுழைவு வாயிலில் வளைவு (ARCH) அமைத்தல், தெற்கு பகுதியில் சுற்றுசுவர் கட்டுதல், பேருந்து நிலைய வளாக நடைபாதையில் டைல்ஸ் பதித்தல், GARDENING மற்றும் வர்ணபூச்சு பணிகள் முடிக்கப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பணி நடைபெறும் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது நேராய்வின் போது இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டிடத்தின் முதல் தளத்திற்கு செல்ல சாய்தளம் (RAMP) அமைத்திடவும், ஆணையர் அவர்களது ஆய்வின் போது பயணிகள் காத்திருப்பு பகுதியில் ANTISKIRIT CERAMIC TILES–க்கு பதிலாக RAJASTHAN KOTTAK TILES அமைத்திட அறிவுறுத்தியதை தொடர்ந்தும், நுழைவு வாயிலில் கூடுதல் பணிகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்ட பணிக்கான மதிப்பீட்டில் வழிவகை செய்யாத பணிகளை செய்ய வேண்டிய நிலையில் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறின்றி பணிகளை முடிக்க வேண்டியதன் அவசரம் கருதி கூடுதலாக ரூ.12,79,696/–க்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஒப்பந்ததாரருக்கு மதிப்பீட்டினை விட கூடுதலாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளுக்குண்டான தொகை ரூ.12,79,696/– வழங்குவதற்கும், கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய்

நிதியிலிருந்து மேற்கொள்ளவும், உரிய அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (5144/2019/இ1)

**63.** விழுப்புரம் நகராட்சி தோற்றுவிக்கப்பட்டு நூறு ஆண்டு நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் நூற்றாண்டு விழா கொண்டாட ஏதுவாக நகராட்சி பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட நூற்றாண்டு விழா சிறப்பு நிதி 2019–20–ன் கீழ் பல்வேறு பணிகள் செய்ய ரூ.50.00 கோடிக்கு நிர்வாக அனுமதி அரசாணை (நிலை) எண்.153 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி (V(1) ) துறை, நாள்.25.11.2019–ல் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்காணும் நூற்றாண்டு விழா நிதியில் இருந்து ரூ.4.65 கோடிக்கு புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மருத்துவமனை சாலையில் நகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத பயணியர் மாளிகை கட்டிடத்தை அகற்றிவிட்டு, விழுப்புரம் நகராட்சியின் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு M/s PSK Engineering Construction & Co என்ற நிறுவனத்திற்கு 14.01.2020 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்பொழுது பணிகள் முடிந்து இறுதி பட்டியலுக்குண்டான தொகை தயார் செய்யப்பட்டு உள்ளது. பணி உத்தரவின்படி ஒப்பந்ததாரருக்கு ரூ.4,23,70,254/–க்கு (மதிப்பீட்டினை விட 4.95% அதிகம்) தொகை வழங்கப்பட்டுள்ள நிலையில், ஒப்பந்ததாரருக்கு கூடுதல் பணிகள் மேற்கொண்டதன் காரணமாக ரூ.4,65,00,000/–க்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கீழ்க்காணும் காரணங்களினால் மதிப்பீட்டு தொகையைவிட ரூ.45,85,474.18/–க்கு பணிகள் முடிக்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்படாமல் உள்ளது.

